# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,638 — 1959 ජනවාරි 10 වැනි සෙනසුරාද — 10.1.1959**

11,638 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 10 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்

**1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை இலக்கம் 110.**

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (vi) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் டொன் பிலிப் றூபசிங்க குணவர்த்தன, விவசாய உணவு அமைச்சர் ஆகிய யான், 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ந் திகதி தொடக்கம் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் உள்ள வியாபாரிகளுக்கும் விநியோகத்தர்களுக்கும் மாசிக்கருவாடு (எல்லா வர்க்கங்களும்) வழங்கும் அளவை விதிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படியும், மாசிக் கருவாடு (எல்லா வர்க்கங்களும்) பங்கீடு செய்யும் முறை ஒன்றை விதித்துப் பரிபாலனஞ் செய்யும் படியும் இக்கட்டளையினால் உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு ஆஞ்ஞையிடுகிறேன்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ந் திகதி.

டீ. பீ. ஆர். குணவர்த்தன,
விவசாய உணவு அமைச்சர்.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது